## Auckland Regional Public Health Service

**Rātonga Hauora ā Iwi o Tamaki Makaurau**

AUCKLAND DISTRICT HEALTH BOARD

COUNTIES MANUKAU DISTRICT HEALTH BOARD

Waitemata District Health Board Te Wai Awhina

Working with the people of Auckland, Counties Manukau and Waitemata

## Auckland Regional Public Health Service

**Rātonga Hauora ā Iwi o Tamaki Makaurau**

AUCKLAND DISTRICT HEALTH BOARD

COUNTIES MANUKAU DISTRICT HEALTH BOARD

Waitemata District Health Board Te Wai Awhina

Working with the people of Auckland, Counties Manukau and Waitemata

# உங்கள் மருத்துவர் உங்களை ஒரு மருத்துவமனை அல்லது மருந்தகத்தில் இருக்கும் மருத்துவ நிபுணரிடம் பரிந்துரை செய்யும் போது

**Doctor Referral—Tamil**
**July 2011**

**மருத்துவர் உங்களை ஒரு மருத்துவமனை அல்லது மருந்தகத்தில் இருக்கும் மருத்துவ நிபுணரிடம் பரிந்துரை செய்துள்ளார். இது இலவசமானது. அதோடு இதற்காக உங்களிடம் எவ்விதத் தொகையும் வசூலிக்கப்படாது.**

முன்பதிவு சந்திப்பு நேரம் குறித்து மருத்துவமனை அல்லது மருந்தகத்திலிருந்து உங்களுக்கு ஒரு கடிதம் கிடைக்கும். முன்பதிவு சந்திப்பு நேரம் கிடைப்பதற்குப் பெரும்பாலும் குறைந்தபட்சம் மூன்று மாதங்கள் எடுக்கும்.

கடிதம் வந்தவுடன் நீங்கள் கண்டிப்பாக அதைப் படிக்கவும் அல்லது யாரையாவது படித்துக்காட்டும்படி கேட்கவும். அதில் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளை நீங்கள் பின்பற்றி அந்த முன்பதிவு சந்திப்பு நேரத்திற்குச் செல்வீர்கள் என்பதை நீங்கள் உறுதிசெய்ய வேண்டும்.

தேவை ஏற்படின் நீங்கள் மருத்துவமனையில் அல்லது மருந்தகத்தில் உரைபெயர்ப்பாளர் ஒருவர் வேண்டுமென்று கேட்கலாம். நீங்கள் ஆண் அல்லது பெண் உரைபெயர்ப்பாளர் வேண்டுமென்றும் உங்கள் மொழியைச் சார்ந்த குறிப்பிட்டதொரு வட்டார வழக்குமொழியில் வேண்டுமென்றும் கேட்கலாம்.

நீங்கள் உங்கள் முன்பதிவு சந்திப்பு நேரத்தை மாற்றவோ ரத்துச்செய்யவோ வேண்டியிருந்தால், நீங்கள் அந்த மருத்துவமனை அல்லது மருந்தகத்துடன் தொலைபேசிவழி தொடர்புகொண்டு தெரிவிக்கவேண்டும்.

நீங்கள் அந்த முன்பதிவு சந்திப்பு நேரத்திற்குச் செல்லாவிடில் புதியதொரு முன்பதிவு சந்திப்பு நேரத்தைப் பெற நீண்ட காலம் எடுக்கலாம். அதோடு காத்திருப்போர் பெயர்ப் பட்டியலிலிருந்தும் நீங்கள் நீக்கப்படலாம்.

மருத்துவமனை நீங்கள் சென்று பார்க்கும் பொது மருத்துவரிடம் (பீ) ஓர் அறிக்கையை அனுப்பிவைக்கும். அப்படி உங்களுக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட பொது மருத்துவர்கள் (பீ) இருப்பாராயின் இந்த மருத்துவமனை அல்லது மருந்தகத்திற்குப் பரிந்துரை செய்த மருத்துவரிடம் இந்த மருத்துவ அறிக்கை செல்லும்.

ஒரு மருத்துவமனை அல்லது மருந்தகத்தின் முன்பதிவு சந்திப்பு நேரத்திற்குச் செல்லச் சரியாகத் திட்டமிட வேண்டும்.

உங்கள் முன்பதிவு சந்திப்பு நேரத்திற்குச் சற்றுக் கூடுதலான நேரத்திற்கு முன்னரே மருத்துவமனை அல்லது மருந்தகத்திற்குக் கொண்டு செல்லக்கூடிய போக்குவரத்தினை நீங்கள் கண்டறிய வேண்டும். இதற்குமுன்னர் இந்த மருந்தகத்திற்கு நீங்கள் சென்றதில்லையெனில் அந்த மருந்தகத்தைக் கண்டுபிடிக்க அரை மணிநேரமாவது இடங்கொடுக்க வேண்டும். உங்களுக்கான முறையை நீங்கள் தவறவிடாதிருக்க நீங்கள் குறித்த நேரத்தில் அங்கிருப்பது முக்கியமாகும்.

உங்களுக்குக் குழந்தைகள் இருந்தால், குடும்ப உறுப்பினர் அல்லது நண்பர் ஒருவர் அவர்களை வீட்டிலோ அல்லது உங்களோடு மருத்துவமனையிலோ பராமரித்துக் கொள்வது உங்களுக்கு உதவியாக இருக்கும். இதை ஏற்பாடு செய்யவேண்டியது உங்கள் பொறுப்பாகும்.